**சார்பு நீதிமன்றம், கீரனூர்**
**முன்னிலை – திரு. C. ராஜேஷ்,** B.A., B.L.,
**சார்பு நீதிபதி, கீரனூர்**

2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ம் நாள் செவ்வாய்கிழமை
2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 15 ம் நாள்

I.A.1/2026 IN OS.No.150/2022

செந்தில்குமார் ... மனுதாரர்/பிரதிவாதி

// எதிராக //

1. சுப்பிரமணியன் (இறப்பு)
2. மீனாகுமாரி,
3. ஐஸ்வர்யா,
4. சீதாலெட்சுமி,
5. ராதாகிருஷ்ணன் ... எதிர்மனுதாரர்கள் /வாதிகள்

இம்மனுவானது, கடந்த 11.04.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G. பாஸ்கரன், M.A., M.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் திரு. M. வீரப்பன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனு அபிடவிட், எதிருரை பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனு உரிய காலத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யப்படாத காரணத்தை மன்னித்து, ஆவணங்களை ஏற்று மேல்நடத்த உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 1 (3) ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

1. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. இன்றையதினம் மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. மனுதாரர் சில ஆவணங்களை பல்வேறு இடங்களில் இருந்து தேடி கண்டு பிடிக்கவேண்டிய நிலை ஏற்பட்டதால் ஆவணங்களை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. இந்த

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2026.04.28 17:23:52 +0530

காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதார் /பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம் :</u>

2. இம்மனு நிலைக்கக்கூடியது அல்ல. மனுதாரர் மனுவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வீட்டில் தொலைந்துவிட்டதாகவும் பல இடங்களில் தேடிப்பார்த்து தற்போது தான் கிடைத்தது என சொல்லியுள்ளது ஏற்புடையதல்ல. மனுதாரர் மனுவில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கில் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என எவ்வித விபரத்தையும் தனது சாட்சிய நிரூபண பிரமாணப்பத்திரிக்கையில் சொல்லவில்லை. மனுதாரர் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

**4. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதேயாகும்.**

5. அசல் வழக்கானது, பிரதிவாதியிடமிருந்து தொகை வரவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், வாதிகள் தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தற்போது தான் தேடி எடுத்ததாகவும், மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அதனால் இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது. அதற்கு மாறாக மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் என்ன காரணத்திற்காக தாக்கல் செய்யப்படுகிறது என்று மனுவில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது. அதைத்தவிர எதிர்மனுதார்கள் தரப்பில் வேறு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

C RAJESH Digitally signed by C RAJESH
Date: 2026.04.28 17:23:59 +0530

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.04.28 17:24:04 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.04.28 17:24:08 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.04.28 17:24:14 +0530